සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

නැටුම් (භරත) I
நாட்டியம் (பரதம்) I
Dancing (Baratha) I

53 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(1), (2), (3), (4), (5)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** ஆலய வழிபாட்டில் ஷோடசோபசாரத்தில் நிருத்திய உபசாரம் என்பது
(1) வாத்தியம் (2) பண்ணிசை (3) நாட்டியம் (4) சங்கீதம் (5) தீபாராதனை

**2.** நடராஜர் கனக சபையில் ஆடிய தாண்டவம்
(1) ஊர்த்துவ தாண்டவம் (2) நாதாந்த தாண்டவம்
(3) சந்தியா தாண்டவம் (4) ஆனந்த தாண்டவம்
(5) திரிபுர தாண்டவம்

**3.** கரணங்களில் முதலாவதாக இடம்பெறுவது
(1) தலபுஸ்பபுடம் (2) உன்மத்தம் (3) அபவித்தம்
(4) வர்ஜீதம் (5) சக்கரமண்டலம்

**4.** எழுபத்திரண்டு மேளகர்த்தா சக்கரம் இரு பெரும் பிரிவுகளாவதற்கு காரணம்
(1) ஸட்ஜம் (2) மத்திமம் (3) பஞ்சமம் (4) தைவதம் (5) காந்தாரம்

**5.** ; ; ; ; ;, த, திங், கி | ணதொம்த, திங், கிண | தொம்த, திங், கிணதொம் ||
இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி தாளாங்கத்தில் அமையக்கூடிய ததிங்கிணதொம் அமைந்துள்ள ஜாதி
(1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம் (4) மிஸ்ரம் (5) சங்கீர்ணம்

**6.** 17ஆம் நூற்றாண்டில் தனியான ஒரு நடன நாடகப்பத்ததியாக உருவாகிய நடனம்
(1) பரதநாட்டியம் (2) குச்சிப்புடி (3) கதகளி
(4) ஒடிசி (5) மணிப்புரி

tamilguru.lk

**7.** பாகவதமேளம் என்ற நடன நாடகக்கலை வடிவம் காணப்படும் ஆடல்
(1) கதக் (2) கதகளி (3) ஒடிசி (4) குச்சிப்புடி (5) மணிப்புரி

**8.** பரதநாட்டியத்தில் சொற்கட்டுக்கள் போன்று கதக் நடனத்தில்
(1) தோராக்கள் (2) தீர்மானங்கள் (3) தருக்கள்
(4) அடவுகள் (5) கோர்வைகள்

**9.** முகமூடிகள் அணிந்து ஆடப்படும் நம்நாட்டு நடன வகை
(1) கண்டிய நடனம் (2) றுகுணு நடனம் (3) சப்ரகமுவ நடனம்
(4) கோலம் (5) சொக்கரி

**10.** எலத்தாளம் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் ஆடல்வகை
(1) கதகளி (2) பரதநாட்டியம் (3) மணிப்புரி (4) ஒடிசி (5) கதக்

[பக். 2 ஐப் பார்க்க

**11.** பறவைகளின் ஒலி அசைவுகளை வெளிப்படுத்தி ஆடும் வண்ணம்
(1) ஈரடி வண்ணம் (2) கிரளா வண்ணம் (3) அஸத்ருஸ வண்ணம்
(4) உரக வண்ணம் (5) வைரோடி வண்ணம்

**12.** சப்ரகமுவ நடன மரபில் பிசாசுகளுக்கு சாந்திகருமம் ஆற்றும்போது பயன்படுத்தப்படும் ஆடல் மரபு
(1) யக்பத மாத்ரய (2) யாதினி மாத்ரய (3) சிந்து மாத்ரய
(4) முல் மாத்ரய (5) பட்டுதல் மாத்ரய

**13.** சோழர் காலத்தில் ஆடல் மகளிர் குடியிருப்புப் பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது ?
(1) அரங்கம் (2) வாசஸ்தலம் (3) அரண்மனை (4) தளிர்சேரி (5) இல்லம்

**14.** ஆலயங்களில் நடனமாடுவதற்கென அமைக்கப்படும் இடம்
(1) நாடகசாலை (2) கூத்தம்பலம் (3) வட்டக்களரி
(4) கொட்டகை (5) நாடக அரங்கு

**15.** வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்கள்
(1) வைரியர் (2) கோடியர் (3) விறலியர் (4) கூத்தியர் (5) வைணீகர்

**16.** இயற்கையில் இருந்து பெறப்பட்ட கிராமிய இசைக் கருவிகளுள் ஒன்று
(1) உடுக்கு (2) தப்பு (3) மத்தளம் (4) சேமக்கலம் (5) சங்கு

**17.** ஆய கலைகள் அறுபத்திநான்கு எனக் கூறியவர்
(1) திருவள்ளுவர் (2) ஔவையார் (3) இளங்கோவடிகள்
(4) வாத்சாயனார் (5) திருமூலர்

**18.** தமிழ்ப் பதங்களின் முன்னோடி என அழைக்கப்படுபவர்
(1) அருணாசலக்கவிராயர் (2) முத்துத்தாண்டவர் (3) வடிவேலு
(4) பொன்னையா (5) கோபால கிருஷ்ண பாரதியார்

**19.** இறைவனை அடையவிழையும் அடியவனின் ஆன்ம பக்குவ நிலைகளைத் தலைவன், தலைவி உறவு முறையில் பாடும் பாடல் உருப்படி
(1) கீர்த்தனை (2) சப்தம் (3) கவுத்துவம்
(4) தோடயமங்களம் (5) பதம்

**20.** கோபுரத்தின் நிழல் ஒருபோதும் நிலத்தில் விழாதபடி அமைக்கப்பட்டுள்ள திருக்கோயில்
(1) சிதம்பரம் (2) ஸ்ரீரங்கம் (3) மதுரை மீனாட்சியம்மன்
(4) கும்பகோணம் சாரங்கபாணி (5) தஞ்சை பிரகதீஸ்வரர்

**21.** நடராஜப் பெருமானின் "நிருத்த சபை" அமைந்துள்ள ஆலயம்
(1) தஞ்சைப் பிரகதீஸ்வரர் (2) திருவண்ணாமலை (3) தில்லைச் சிதம்பரம்
(4) சாரங்கபாணி (5) மதுரை மீனாட்சி

**22.** சிவபிரானின் திருநடனத்தினை "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே" எனப் பாடியவர்
(1) மாணிக்கவாசகர் (2) திருஞானசம்பந்தர் (3) சுந்தரமூர்த்தி நாயனார்
(4) திருமூலர் (5) காரைக்கால் அம்மையார்

**23.** பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவத்தின் மறுபெயர்
(1) கௌரி தாண்டவம் (2) சந்தியா தாண்டவம்
(3) ஆனந்த தாண்டவம் (4) ஊர்த்துவ தாண்டவம்
(5) முனி தாண்டவம்

**24.** மிஸ்ர ஜாதி அடதாளம் கண்டகதியுடன் சேரும்போது வரும் மாத்திரைகள்
(1) 90 (2) 92 (3) 94 (4) 96 (5) 98

**25.** தாமரையின் இதழ்களைச் சேர்த்துவைத்து ஊசி நுழையும் நேரத்தினைக் கூறுவது
(1) மார்க்கம் (2) கிரியை (3) காலம் (4) நிமிஷம் (5) அங்கம்

**26.** மாயாமாளவகௌளை இராகம் இடம்பெறும் சக்கரம்
(1) இந்து (2) அக்னி (3) ருது (4) பாண (5) திசி

[பக். 3 ஐப் பார்க்க

**27.** அபிநயதர்ப்பணத்தில் அனுசாயி எனக் குறிப்பிடப்படும் அபிநயம்
(1) ஆங்கிகம் (2) சாத்வீகம் (3) ஆஹார்யம்
(4) வாசிகம் (5) ஸ்வேதம்

**28.** உணர்வுகளை உடலின் அங்க அசைவுகளினால் வெளிக்காட்ட உதவும் பாவம்
(1) அநுபாவம் (2) விபாவம் (3) சாத்விகாபாவம்
(4) சஞ்சாரிபாவம் (5) ஸ்தாயிபாவம்

**29.** நாயகிக்குரிய அலங்காரப் பொருட்களைத் தயாரிப்பதில் வல்லமை பெற்றவள்
(1) சேடி (2) தாஸி (3) சகி (4) இலிங்கினி (5) சில்பினி

**30.** ஸ்வீயா நாயகியின் கணவன்
(1) வைசீகன் (2) உபபதி (3) தீரசாந்தன் (4) பதி (5) திரோத்தன்

**31.** நாயகன் சொல்வதை நாயகியிடத்தும் நாயகி சொல்வதை நாயகனிடத்தும் தூது எடுத்துச் செல்பவள்
(1) சகி (2) முக்தா (3) ஸ்வீயா
(4) தூதி (5) கன்னியா

**32.** தயா வீரனுக்கு உதாரணமாக எடுத்துக் கூறப்படுபவர்
(1) சிபிச்சக்கரவர்த்தி (2) துரியோதனன் (3) இராவணன்
(4) கர்ணன் (5) அர்ச்சுனன்

**33.** அவிழ்ந்த தன் திருமுடியைத் திருமால் முடிந்து கொண்ட அசைவுகளில் இருந்து தோன்றிய விருத்தி
(1) ஆரபடி (2) கைசிகி (3) சாத்வதி (4) பாரதி (5) அவபாதம்

**34.** மகரிமரபு காணப்பட்ட ஆடல் எது ?
(1) குச்சுப்புடி (2) பரதநாட்டியம் (3) கதக் (4) கதகளி (5) ஒடிசி

**35.** பிண்டி, பிணையல் என முறையே ஒற்றைக்கை, இரட்டைக்கை முத்திரைகளைக் கூறும் நூல்
(1) கூத்து நூல் (2) அபிநயதர்ப்பணம் (3) சங்கீத இரத்தினாகரம்
(4) சிலப்பதிகாரம் (5) மகாபாரதச் சூடாமணி

**36.** நாட்டியம் வெற்றிபெறத் தேவையான அனைத்தும் எவ்வாறு பொருத்தமுடன் கையாளப்பட வேண்டும் என்ற தகவலை நாட்டிய சாஸ்திரத்தின் எத்தனையாவது அத்தியாயம் கூறுகின்றது ?
(1) 3ஆவது அத்தியாயம் (2) 7ஆவது அத்தியாயம் (3) 9ஆவது அத்தியாயம்
(4) 27ஆவது அத்தியாயம் (5) 36ஆவது அத்தியாயம்

**37.** ஸ்தானக பேதங்களில் ஒன்று
(1) லுடிதம் (2) ஐந்தரம் (3) பிரேங்கணம்
(4) ஸ்வஸ்திகம் (5) அஷ்வோத்பிளவனம்

**38.** வீரன் என்பவன் இயற்கையாகவே கீழ்க்காணும் எக் குணமுடையவன் ?
(1) தாமசிக் (2) சாத்வீகம் (3) ராஜசிக்
(4) தாமசிக்கும் ராஜசிக்கும் (5) ராஜசிக்கும் சாத்வீகமும்

**39.** நரசிம்ம அவதாரத்தின் பிரதான ரஸங்கள் எவை ?
(1) பீபத்ஸ, ரௌத்ர (2) வீர, ரௌத்ர (3) ரௌத்ர, உற்சாக
(4) பயானக, வீர (5) வீர, அற்புத

**40.** ஊழியக்காரிக்கும் வீட்டுத் தலைவனுக்கும் இடையேயான பாவம்
(1) வாத்ஸல்ய பாவம் (2) சாந்தா பாவம் (3) மதுர பாவம்
(4) சாக்கிய பாவம் (5) தாஸிய பாவம்

**41.** சம்பிரதாய வழக்கத்தின்படி சகல நாட்டியக் கச்சேரிகளிலும் இறுதியாக இடம்பெறும் உருப்படி
(1) விருத்தம் (2) மங்களம் (3) தோடய மங்களம்
(4) கீர்த்தனம் (5) ஸ்லோகம்

[பக். 4 ஐப் பார்க்க

**42.** குரவை, துணங்கை, வெறியாடல் என்னும் ஆடல்கள் காணப்படும் இலக்கியம்
(1) சங்கமருவிய கால இலக்கியம்
(2) சங்ககால இலக்கியம்
(3) பல்லவர் கால இலக்கியம்
(4) சோழர் கால இலக்கியம்
(5) நாயக்கர் கால இலக்கியம்

**43.** கௌரி அம்மாவிடம் ருக்மணி அருண்டேல் அம்மையார் முதலில் கற்றுக்கொண்ட உருப்படி
(1) திஸ்ர அலாரிப்பு
(2) வசந்தா ஜதிஸ்வரம்
(3) ஸரஸி ஜாக்ஷுலு சப்தம்
(4) தன்யாசி வர்ணம்
(5) மோகன தில்லானா

**44.** நாட்டிய கலாகேசரி என்ற சிறப்பு விருதினைப் பெற்ற நாட்டியக் கலைஞர்
(1) பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(2) ஸ்ரீமதி கௌரியம்மாள்
(3) ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல்
(4) ஸ்ரீமதி பாலசரஸ்வதி
(5) வழுவூர் இராமையாப்பிள்ளை

More Past Papers at
tamilguru.lk

**45.** திரு. ஈ. கிருஷ்ணய்யர் 1918ஆம் ஆண்டு பெற்ற பட்டம்
(1) கலாநிதி
(2) முதுதத்துவமாணி
(3) நடனக் கலைமாணி
(4) இசைக் கலைமாணி
(5) கலைமாணி

**46.** 1972ஆம் ஆண்டு யாருடைய முயற்சியினால் நடனம் பாடசாலையில் ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டது
(1) திரு. வா. வசந்தகுமார்
(2) திரு. பரம்
(3) திரு. ஏரம்பு சுப்பையா
(4) திரு. வீ. கே. நல்லையா
(5) திரு. சொர்ணலிங்கம்

**47.** கலைச்செல்வன் திரு. ஏரம்பு சுப்பையா அவர்கள் இந்தியாவில் முதலில் பரத நாட்டியம் பயின்ற ஆசான்
(1) திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(2) கலாநிதி ஸ்ரீ கோபிநாத்
(3) ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல்
(4) அபிநய அரசி பாலசரஸ்வதி
(5) வழுவூர் இராமையாப்பிள்ளை

**48.** இலங்கையில் மூத்த கலைஞர்களுக்குக் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிப்பது
(1) இலங்கை அரசு
(2) ஜனாதிபதி செயலகம்
(3) கலாசார அமைச்சு
(4) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
(5) கட்புல மற்றும் அரங்காற்றுக் கலைகள் பீடம்

**49.** ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் நடனக் கலை,
(1) அழிந்து விட்டது.
(2) பெரு வளர்ச்சி அடைந்திருந்தது.
(3) அபரிமிதமான வரவேற்பைப் பெற்றிருந்தது.
(4) பெருமதிப்பைப் பெற்றிருந்தது.
(5) வளர்ச்சி குன்றி இருந்தது.

**50.** 1973 இல் இராமநாதன் நுண்கலைத்துறையில் நடனம் ஒரு பாடமாக ஆரம்பிக்கப்பட்டபோது நடனத்திற்கான போதனாசிரியராக இணைந்து கொண்டவர்
(1) கிருஷாந்தி சேனாதிராஜா
(2) ஜெகதாம்பிகை கிருஷ்ணானந்தசிவம்
(3) சாந்தா பொன்னுத்துரை
(4) பத்ம ரஞ்சனி உமாசங்கர்
(5) அனுஷா தர்மராஜா

* * *

AL/2015/53/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

නැටුම් (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Baratha) II

53 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் முதலாம் வினா உட்பட **இரண்டு** வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** நீர் கற்ற வர்ணத்தில் விரும்பிய **மூன்று** சரணஸ்வரங்களையும் அவற்றிற்கான கோர்வைகளையும் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (20 புள்ளிகள்)

**2.** தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களில் ஒன்றான மோகினி ஆட்டத்தை பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு விளக்குக.

(i) தோற்றம்
(ii) வளர்ச்சி
(iii) ஆடல் முறை
(iv) பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள்
(v) ஆடை, அணிகள், ஒப்பனை (4 × 5 = 20 புள்ளிகள்)

**3.** நடராஜ திருவுருவ தத்துவத்தினை விளக்குக. (20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** சங்கமருவிய காலத்து ஆடல் வகைகள் பற்றி விளக்கி, அவற்றுக்குக் கொடுக்கப்பட்ட அந்தஸ்தினையும் விளக்குக. (20 புள்ளிகள்)

**5.** சிறு குறிப்பு எழுதுக.

(i) மத்தளம்
(ii) தமிழ்ப்பதங்கள்
(iii) திருக்குற்றாலக் குறவஞ்சி
(iv) கரணங்கள் (5 × 4 = 20 புள்ளிகள்)

**6.** (i) நவரஸங்களைக் குறிப்பிட்டு, அவற்றுக்குரிய ஸ்தாயி பாவம், இறைவன், நிறம், எதிர்ரஸம் ஆகியவற்றைத் தருக. (14 புள்ளிகள்)

(ii) சிருங்கார ரஸத்தின் உட்பிரிவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

**7.** பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் இசை நடனக்கலைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைத் தொகுத்து எழுதுக. (20 புள்ளிகள்)

**8.** "இந்து ஆலயங்கள் நுண்கலைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை உதாரணங்களுடன் ஆராய்க. (20 புள்ளிகள்)

* * *